உ

# தினசரி ஓர் நற்சிந்தனை

தொகுப்பு:- திரு வி. செல்வரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# தினசரி ஓர் நற்சிந்தனை

தொகுத்து ஆக்கியோன்


திரு வி. செல்வரத்தினம் J.P.

(அகில இலங்கை சமாதான நீதவான்)

தலைவர், அராலி வண்ணப்புரம்

ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர்

தேவஸ்தான பரிபாலன சபை


விலை: ரூபா 30-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னால் தொகுக்கப்பட்டு வெளிவர இருக்கும் அறிவு நூல்கள்

1. 1008 முத்து துளிகள்
2. 1008 சிந்தனைத் துளிகள்
3. 1008 அமுத மொழிகள்
4. 1008 பொது அறிவு வினா விடை
5. 1008 பலநாட்டு பலவித பழமொழிகள்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"எனக்கு சோறு ஊட்டி உடுபுடவை
உடுத்து பலவித பண்டங்கள் ஆக்கி
எனது கல்விக்கு உறுதுணை
யாக இருந்து என்னை
பெற்றெடுத்த என் அன்புத்
தாய் தந்தையருக்கு இச் சிறிய
நூலை சமர்ப்பணம் செய்கிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என்னுரை

### கடவுள் வணக்கம்

கல்லாத மூடனுக்கும் கல்வி தரும், சுற்றறிந்தோர்
எல்லாரும் மனமகிழ இசைத்தமிழின் இயல்புதரும்
நல்லாரை உறவாக்கும், நலந்தரு நன்னெறியுந்தரும்
பொல்லாத வினைதீர்க்கும் பொல்லாத குஞ்சரமே.

நான் பல அறிவு நூல்களையும் ஆன்மீக நூல்களையும் வாசித்த போது அங்கே ஆன்மிக பெரியார்களின் சிந்தனையில் தோன்றிய சில கருத்துக்களை வைத்தே ''தினசரி ஓர் நற்சிந்தனை'' என்னும் இச் சிறிய நூலைத் தொகுத்தேன்.

நிம்மதியை தேடி அங்கும் இங்கும் அலைந்து அல்லற்ப்பட்டுத் திரியும் மக்களுக்கு உன் உள்ளத்தினிலேயே, உனக்குள்ளே அந்த நிம்மதி இருக்கிறது என்பதை இந் நூல் எடுத்து கூறுகின்றன மேலும் நமது பலவீனங்கள், தவறுகள் மற்றும் எம்மை கெட்ட செய்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தும் குணங்கள் யாவற்றையும் நீக்கிவிட வழிகாட்டும் ஓர் சிந்தனை நூலாகும் இவ் நூலை படித்து கிரகித்தலின் மூலம் எம் எதிர் கால வாழ்வை செம்மைப்படுத்தவும், நல்வாழ்வுக்கும், வாழ்வின் வெற்றிக்கும் வழிகாட்டவும் உதவும் என்பது திண்ணம்.

என்னுள் நீங்காது உறைந்து நின்று இவ் நூலை தொகுத்து நூலாக வெளிவர திருவருளை வழங்கிய சிவபெருமானை வணங்கி இனிமேலும் எளியேனை வழிப்படுத்தி அருள்வாராக.

இந் நூலை பல சிரமத்திற்கு மத்தியிலும் சிறப்பான முறையில் அழகுற உருவாக்கித் தந்த சங்கானை திருமொழி அச்சக உரிமையாளருக்கும் எனது பெரும் நன்றிகள்.

இந் நூலை படிக்கும் அன்பர்களுக்கு வாழ்க்கையில் என்றென்றும் சந்தோஷம் நிலவட்டும் சுபீட்சம் துலங்கட்டும் வசந்தம் பிறக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி

அப்புக்காத்து வளவு
அராலி மத்தி
வட்டுக்கோட்டை

அன்பன்

10-10-1998

வி. செல்வரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி ஓர் நற்சிந்தனை

## ஜனவரி — 01

1 - 1

**01.** நீ எந்த அளவிற்கு இறைவனை நாடுகிறாயோ அந்த அளவிற்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப்போகும். நீ செய்ய வேண்டியதை முழுமனதோடு செய்து விட்டுப் பயனை இறைவனிடம் விட்டுவிடு.

2 - 1

**02.** பிறருக்கு பணிவிடை செய்யும் போது கிடுகிடுக்காதே ஆனால் அதற்கு மாறாக அதில் ஆனந்தம் அடை, அதற்குரிய சந்தர்ப்பத்தைத் தேடு. சேவையே தெய்வ வழிபாடாகும்.

3 - 1

**03.** யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.

4 - 1

**04.** உங்களுடைய இன்பத்திற்காக மற்றவர்கட்கு தீங்கு செய்யக் கூடாது. தீமை செய்தால் பிறவித்துன்பம் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். அகையால் நன்மையே செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 - 1

**05.** பேசாதவர்களிடம் சென்று பேசுங்கள் வராதவர்கள் வீட்டுக்குப் போங்கள். கோபித்தவர்களைச் சமாதானப் படுத்துங்கள். இவை எல்லாம் அவர்களுடைய நலனுக்காகவே செய்ய வேண்டும். அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று பாராதே 6 - 1

**06.** சத்தியமே வெற்றிதரும் சத்தியத்தையே ஏணியாக உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள். 7 - 1

**07.** எப்போதுமே தோல்வியை மட்டும் தனியாகப் பிரித்துப் பார்க்காதீர்கள். அது வெற்றியின் அம்சம் என்பதை உணருங்கள். 8 - 1

**08.** நல்லவைகளை அடைய நீங்கள் பாடுபட்டு உழையுங்கள். நல்ல காரணங்களுக்காக நீங்கள் செய்யும் உழைப்பு கடவுளுக்குச் செய்யும் பிரார்த்தனையாக அமைகிறது. 9 - 1

**09.** செயலை விதையுங்கள பழக்கம் உருவாகும், பழக்கத்தை விதையுங்கள் குணம் உருவாகும், குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர் காலம் உருவாகும். 10 - 1

**10.** நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ, மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே, அது உனக்கு ஆபத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 - 1

11. உனது அறிவையும் ஆற்றலையும் நீ பகிர்ந்து கொள்ளாவிட்டால் அது உன்னை அழித்து விடும். 12 - 1

12. உங்களிடம் இருக்கும் அளவற்ற ஆற்றலை வெளிப்படுத்த முயலாதபோது தான் உங்களுக்கு தோல்வி ஏற்படுகின்றது. ஆகவே உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள். 13 - 1

13. பிறரின் நல்ல கருத்துகளை, நல்ல செயல்களைச் சீரணிக்க முடியாதவர்களை தான் சமூதாயத்திலே அயோக்கியர்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளவும். 14 - 1

14. உண்மை சொல்லப் பழகிக் கொள்ளுங்கள், உறுதியை நெஞ்சில் தேக்கிக் கொள்ளுங்கள், திறமைகள் தம் அறிவு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். 15 - 1

15. மந்திரம் உடலைத் தூய்மைப் படுத்துகின்றது. இறைவனின் மந்திரத்தை உச்சரிப்பதால் மனிதன் தூய்மை அடைகிறான் ஆகவே உமக்கு விரும்பிய ஓர் மந்திரத்தை ஓதுவாயாக 16 - 1

16. புலன்கள் உனக்குக் கட்டுப்பட்டு அடங்குமானால் உள்ளத்தின் ஆழத்தில் உறையும் ஈசனை நீ காண்பது உறுதி 17 - 1

17. இறைவன் அருளால் உனக்களிக்கப்பட்ட விவேகத்தை உன் ஆணவம் கெடுக்க நீ இடம் கொடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 - 1

18. நல்லவரோடு நட்பு கொண்டிரு அப்படி இருப்பதன் மூலம் நீயும் அவர்களில் ஒருவனாக நாளடைவில் ஆகிவிடுவாய்.

19 - 1

19. உனக்கு உள்ள காலம் மிகக் குறைவு அதை வீணாக்க வேண்டாம் ஏதும் ஓர் நல்ல காரியம் செய்ய முயலுங்கள். அவன் என்ன செய்கிறான் இவன் என்ன செய்கிறான், அதை ஏன் அவன் செய்கிறான் என்ற பிறரின் செயல்களை விட்டுவிட்டு நீ நல்ல காரியங்களில் ஈடுபடு

20 - 1

20. நீ இந்த உலகத்திற்கு வந்து விட்டாய் எவ்வளவு காலத்திற்கு இந்த வாழ்வு ஆகையால் ஏதாவது ஓர் நல்ல காரியத்தை செய்து விட்டு அப்பாற் போ.

21 - 1

21. கடவுளை நம்பி எஞ்சியுள்ள நாட்களை முடித்துக்கொள் நீ படைத்த அனைத்தையும் தெய்வபக்திக்குச் சமர்ப்பித்தாய் என்று மகிழ்ச்சியோடு இரு

22 - 1

22. உனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் தியானம் செய்

23 - 1

23. இந்தத் ''தான்'' என்கிற கர்வத்தை விடு எல்லோரும் உன்னிடம் அன்பு கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24.** நான், எனது என்று ஓயாமல் புலம்புகிறாயே முதலில் நீ உனக்கு சொந்தமா என்று யோசித்துப்பார். ஆராய்ந்து பார்த்தால் நான் என்ற அகந்தை அழியும் மனதில் ஒளி தோன்றி நிறை ஏற்படும் ஆண்டவன் நினைவு பெற்று அடைவாய் **25 - 1**

**25.** பிணி வருவதற்குமுன், மூப்பு உண்டாவதற்குமுன், புத்தி மங்கி மறைவதற்குமுன், சாவு நெருங்குவதற்குமுன், உடல் நலத்துடன் இருக்கும் போதே, செய்யவேண்டிய நல்ல நல்ல காரியங்களை செய். **26 - 1**

**26.** தூய்மையான உள்ளத்தை இதயத்தில் அமிழ்ந்து நிற்கச் செய்யப் பயிலுங்கள். **27 - 1**

**27.** உண்மையே பேசுங்கள், கொஞ்சமாக பேசுங்கள், அன்புடன் பேசுங்கள், இனிமையாகப் பேசுங்கள் சகல வழியிலும் உங்களுக்கு முன்னேற்றம் உண்டு. **28 - 1**

**28.** உனக்கு தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களுக்கும் துயரங்களுக்கும் அடங்கி உள்ளத்தில் அமைதி உண்டாவதற்கும் பிரார்த்தனையை விட சிறந்தவழி வேறு இல்லை **29 - 1**

**29.** எவரோடும் சண்டையிடாதே, யாரையும் பழிவாங்காதே, அவதூறாகப் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 - 1

**30.** காலையில் எழுந்ததும் இறைவா நான் நல்வழியில் நிற்க அருள் செய் என்று பிரார்த்தனை செய்யுங்கள். 31 - 1

**31.** உறங்கும் போது ''இறைவா'' உன்னுடைய எண்ணமே என் இதயத்தில் நிலைத்து நிற்க அருள்வாய் என்று தொழுங்கள்.

## பெப்ரவரி — 02

1 - 2

**32.** எப்போதும் பாடுபடு எப்போதும் உழைத்துக்கொண்டிரு உழைப்பிலே சுகமிருக்கிறது வறுமை, நோய் முதலிய குட்டிப் பேய்கள் எல்லாம் உழைப்பை கண்டவுடன் ஓடிப்போய்விடும்.

2 - 2

**33.** ஆரோக்கிய மில்லாத காமம், வெகுளி, சுயநலம், பேராசை பற்றிய அழுக்கான வாழ்க்கையை கைவிடுங்கள். அன்பு, தயை, பொறுமை தியானம் ஆகியவற்றை வளர்க்கும் தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள் 3 - 2

**34.** மக்களிடம் அன்பாக இருங்கள், கடுமையாக இராதீர்கள். அவர்களுக்கு ஊக்கமளியுங்கள் அவர்களை ஒதுக்கித் தள்ளாதீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 - 2

**35.** இறைவனின் பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள் மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள் இறைவனைப் பூசிக்கும் பாடல் களை கேளுங்கள்; முடிந்தால் நீங்களே பாடுங்கள் 5 - 2

**36.** எண்ணத்தினாலோ, வார்த்தைகளினாலோ, செயல்களினாலோ யாருக்கும் தீங்கு செய்யாதீர்கள் எல்லோரிடமும் அன்பாகவிருங்கள் உங்களுக்கு சகல சித்திகளும் கிடைக்கும் 6 - 2

**37.** உண்மைக்காக எதையும் துறவுங்கள் ஆனால் எதற்காகவும் உண்மையை துறக்காதீர்கள். 7 - 2

**38.** நாம் அன்றாடம் எத்தனையோ செலவுகளைத் தேவை இல்லாமற் செலவு செய்கிறோம் அதனை தவிர்த்து ஆலய பூசைகளுக்கு செலவழிக்கவும் அதனால் உங்கள் வாழ்வு செழிக்கும்.

8 - 2

**39.** எல்லா உறவுகளையும் அன்பின் வடிவமாகக்கண்டு நேசிக்கப் பழகவேண்டும். அதனால் உங்கள் வாழ்வு மலரும் 9 - 2

**40.** உனக்கு இறைவனைக் காணவேண்டுமாயின் மனிதனுக்குப் பணிசெய்க. 10 - 2

**41.** 'நமசிவாய' அல்லது 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்து மந்திரம் மிகவும் சக்திவாய்ந்தது அதனை தினமும் உச்சரிக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 - 2

42. எது நடந்தாலும் அது நமது நன்மைக்கே இறைவா உன் விருப்பப்படியே எல்லாம் நிகழும் என்ற நம்பிக்கையுடன் செயலாற்றுங்கள். 12 - 2

43. ஒவ்வொரு நாளும் புதிய ஆரம்பமே அதை நல்ல விதத்தில் பயன்படுத்துங்கள். 13 - 2

44. ஒருபொழுதும் பிறரை ஏமாற்ற முனையாதீர்கள்.

14 - 2

45. கடந்ததைப் பற்றிக் கவலைப்படாமல் எதிர் காலத்தைப் பற்றி ஏங்காமல் கையில் இருக்கும் காரியத்தில் கவனம் செலுத்துங்கள்

15 - 2

46. நல்லவராயிருங்கள், நல்லதைச் செய்யுங்கள் சொர்க்கத்தின் கதவுகள் உங்களுக்கு திறக்கப்படும். 16 - 2

47. பேச்சைக் கண்காணியுங்கள் தீயதை விடுங்கள் இதயத்தைச் சுத்தப்படுத்துங்கள் தியானம் செய்யுங்கள் மனதைக் கட்டுப்படுத்துங்கள் இறைவனை உணர்வீர்கள். 17 - 2

48. பொறுமை ஒரு மகத்தான ஆன்மிகப் பண்பாகும் எனவே பொறுமையை வளருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 - 2

49. நான் இன்று கோபப்படமாட்டேன் என்று ஒவ்வொரு நாளிலும் உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும்.

19 - 2

50. கோபத்தில் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள் அதை ஆழ்ந்த தியானத்தில் பயன் படுத்துங்கள் உங்களுக்கு மன அமைதி கிடைக்கும்

20 - 2

51. மனதை நிலைப்படுத்தி அமைதியாக அமருங்கள் அன்புடன் ஆண்டவனை வேண்டுங்கள் இடைவிடாது அவன் நாமத்தை உச்சரியுங்கள் உங்கள் இதயத்தில் அவர் தோன்றுவார். 21 - 2

52. உங்கள் இதயங்களில் அன்பு என்னும் தீபத்தை ஏற்றுங்கள் அது உங்களை நாள் தோறும் அதிக ஒளியோடு பிரகாசிக்கச் செய்யும்

22 - 2

53. மற்றவர்களுடைய துயரத்தைக் கண்டு இரக்கப்படுங்கள் ஆனால் உங்களுடைய சொந்தக் கஸ்டங்களை உங்களிடமே வைத்திருங்கள். 23 - 2

54. ஆண்டவனை மறவாத நிலையிலுள்ள பெரியோர்களுடன் சில காலம் பழகினால் உனது வாழ்வு சிறக்கும் 24 - 2

55. உண்பதிலும் உறங்குவதிலும் பிறருடைய தேவையற்ற கூட்டுறவிலும் காலம் வீணாகின்றன உடனே இதனை தவிர்த்து இறைவனை வணங்குங்கள், நேரத்தை ஒதுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 - 2

56. எத்தனை இடையூறுதான் வந்தாலும் எடுத்த காரியத்தை உறுதியாகச் செய்து முடிப்பதே சிறந்த லட்சியம் எனக் கொள்க 26 - 2

57. மற்றவர் உள்ளத்தில் உன்னைப் பற்றிய பொய் மதிப்பு உண்டாவதற்கு இடம் கொடுக்காதே. 27 - 2

58. அன்பாக நடந்துகொள் உதவி செய் தொண்டு செய். 28 - 2

59. கடவுளை உண்மையாக நம்பியிருப்பவன் செய்யும் கைங்கரியங்கள் அனைத்தும் தூயதாகவும் பிறருக்கு நன்மை தருவதாகவும் அமையும் என நினைத்துக் கொள்

## மார்ச்சு — 03

1 - 3

60. மனிதனைக் கெடுக்கிறது கோபம் தானே! கடுமையான கோபம் எத்தனை பேரைப் பாழாக்கியிருக்கிறது ஆகவே கோபத்தை தவிர்த்து கொள்வாயாக 2 - 3

61. உலகம் ஏளனம் செய்வதைப் பொருட்படுத்தாமல் நீ உன் கடமைகளைச் செய்துகொண்டே போ 3 - 3

62. பிறருடைய துன்பத்திற்கு நீ எந்தவிதத்திலும் காரணமாக இராதே. துன்பத்தை நீக்குவதற்கு வழிவகையை பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 - 3

63. நீ ஜபமாலை உருட்டலாம், நெற்றியில் திருநீறு பூசலாம், நீண்ட ஜடை தரிக்கலாம் ஆனால் உன் உள்ளத்தில் கொடிய விஷம் இருந்தால் நீ எப்படி கடவுளைக் காண்பாய் 5 - 3

64. இறைவா உன்னிடம் நான் போகம், முக்தி ஒன்றையும் கேட்க மாட்டேன். எனக்கு பக்தியை தானமாக அருள்வாயாக வேறு ஒருவரிடமும் இரத்தல் செய்ய மாட்டேன் உன்னைத்தான் இரப்பேன் 6 - 3

65. உலக வாழ்க்கையில் ஒரு விருந்தினனைப் போல் நடந்து கொள் 7 - 3

66. வாழ்க்கையில் இருந்த வேண்டுமானால் எப்போதும் நல்ல எண்ணங்களுக்கே மனதில் இடம் கொடுங்கள். 8 - 3

67. மனம் அலைபாய்ந்தாலும் சரி அல்லது அலையாமல் அசையாமலும் இருந்தாலும் சரி நாள் தோறும் தவறாமல் தியானமும் ஜபமும் செய்வதற்காக அமர்வதை விட்டுவிடாதே அப்படியாயின் உன் விருப்பம் நிறைவு பெறும் 9 - 3

68. பணத்திடம் நம்பிக்கை வைக்காதிர்கள் நம்பிக்கையிடம் பணத்தைப் போட்டு வையுங்கள் 10 - 3

69. கஷ்டங்களை இறைவனிடம் மட்டும் முறையிடுங்கள் அவன் தீர்ப்பது போல் யாராலும் நம் கஷ்டத்தை தீர்க்கமுடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 - 3

70. வீடு கட்டும்போது சாரம் மரம் அவசியம் ஆனால் வீடு கட்டி முடிந்துவிட்டால் சார மரத்தை தேடுவார் யாரும் இல்லை அதே போல் உன்னை யாருக்குத் தேவையோ அவர்கள் உன்பக்கம் இருப்பார் கள் தேவையில்லை என்றால் உன்னை பார்க்கவே மாட்டார்கள் கதைக்கவும் மாட்டார்கள் இதுதான் மனிதனின் இயல்பு

12 - 3

71. புகழ்பட வாழுங்கள் எல்லோருக்கும் நன்மை செய்யுங்கள் எல்லா மக்களையும் உறவினராக கருதி உழையுங்கள் உதவி புரியுங்கள் அதனால் வரும் நன்மையும் புகழும் இறந்த பின்னும் உங்களுடன் வரும்

13 - 3

72. ஆண்டவனிடம் பக்தி என்ற விதையை உங்கள் மனத்தில் ஊன்றி விடுங்கள் நல்ல நிலமாக இல்லாவிடினும் அது ஒரு நாள் நிச்சயமாக முளைக்கும் அதற்கு ஆண்டவன் துணைபுரிவான்.

14 - 3

73 எந்த வேளையும் இறைவனை நினைக்க வேண்டும் அது ஆரம் பத்தில் முடியாவிட்டாலும் மூன்று வேளைகளில் நினைக்கவும்

15 - 3

74. ஆசைகள் மற்றும் ஆணவத்தை உங்கள் இதயத்திலிருந்து அகற்றுங்கள் கடவுள் அங்கே குடிகொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 - 3

75. நீ உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருந்தால் அன்றி கோயிலுக்கு போய் சிவபெருமானை வழிபடுவதும் பயனற்றனவாகும்

17 - 3

76. காதால் கேட்பதை எல்லாம் நம்பிவிடாதே பழையன என்றும் பரம்பரையாக வந்தன வென்றும் எதையும் நம்பிவிடாதே மக்கள் அதிக மாகப் பேசுகிறார்கள் என்பதற்காக வதந்திகளை நம்பி விடாதே நம்பலாம் போல் தோன்றுகிறது என்ற காரணத்திற்காக எதையும் நம்பிவிடாதே

18 - 3

77. வேலை செய்யாமலிருக்கும் பொழுதே தீமை செய்கிறோம் ஆகவே எப்பொழுதும் ஏதாவது ஆக்கபூர்வமான வேலை செய்து கொண்டே இரு

19 - 3

78. உன் இதயத்தை அன்பில் நன்றாக நனைத்துவிடு காரியங்களை நேர்மையிலும் உணர்ச்சிகளைக் கருணையிலும் நனைத்துவிடு இப்படிச் செய்தால் நீ கடவுளை மிக சீக்கிரமாக அடைவாய்

20 - 3

79. பின்புறம் இருந்து கொண்டு உன்னைக் கெடுக்கும் நபர்கள் நேரில் வரும்போது இனிமையான வார்த்தைகளால் பேசி மயக்கும் கயவர்கள்

21 - 3

80. அழுது கொண்டே உலகத்திற்கு வருகிறாய் சிரித்துக் கொண்டே அதைவிட்டுச் செல்லும்படி வாழ்வாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 – 3

81. நல்ல செயல்களையும் செய்யாமல் இறைவனையும் வணங்காமல் இவ்வுலகில் வாழ்க்கையை நீங்கள் வீணாக்குவீர்களேயானால் ஆன்மிக சூன்யமாக வெறும் கையோடு மறு உலகிற்குப் போக வேண்டியிருக்கும் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்

23 – 3

82 உனது செல்வம் அழியாமலிருக்க வேண்டுமானால் நீ மூன்று காரியங்களைச் செய்யாமலிருக்க வேண்டும்

1. ஏழைகள் கண்களிலிருந்து நீர் வரவிடாமல் நடந்து கொள்
2. பிறருடைய பொருள் உனக்கு வரவேண்டுமென்று கனவிலும் கருதாதே
3 நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்க்காதே

24 - 3

83 போதும் என்ற திருப்தி உனக்கு என்று உண்டாகிறதோ அன்று இன்ப மாளிகையின் முற்றத்தை நீ அடைந்தவனாவாய்

25 – 3

84. உங்களைத் தெரிந்துகொள்ள உங்கள் மூளையை உபயோகியுங்கள் பிறரைத் தெரிந்து கொள்ள உங்கள் இதயத்தை உபயோகியுங்கள்

26 - 3

85. நல்லவர்களிடம் நட்பு வைத்துக்கொள் அது உன்னை நல்லவனாக்கிவிடும் தீயவர்களிடம் தொடர்பு வைக்காதே இது உன் கண்ணியத்தையும் ஒழுக்கத்தையும் கெடுத்துவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 - 3

86. பசித்தவனுக்கு உணவளியுங்கள் நோயாளிக்கு ஆறுதல் கூறுங்கள் கைதியை விடுதலை செய்யுங்கள் இதுவே தருமத்தில் சிறந்தது

28 - 3

87. இயன்றது அனைத்தையும் செய்யாதே இருக்கிறது அனைத்தையும் செலவழிக்காதே கேட்பது அனைத்தையும் நம்பாதே அறிந்தது அனைத்தையும் கூறாதே

29 - 3

88. நேற்று என்பது ஒரு ரத்துச் செய்யப்பட்ட செக் நாளை என்பது ஒரு புரோ நோட்டு, இன்று என்பது ரொக்கப்பணம் அதை புத்திசாலித்தனமாக செலவழியுங்கள்

30 - 3

89. ஒரு அன்புள்ளவருக்கு உயிரைக் கொடுப்பது அவ்வளவு கடினம் அல்ல அப்படி உயிரைக் கொடுப்பதற்கு தகுதியான ஆளை கண்டு பிடிப்பதுதான் கடினம் என்பதை மறவாதே

31 - 3

90 உங்களைவிட மற்றவர்கள் அதிகம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள்மீது எரிச்சல் அடையாதீர்கள் அது உங்கள் தவறு அவருடையதல்ல என்பதை உணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 - 4

91. நியாயத்தை கடைப்பிடித் தொழுது எப்போதும் உண்மையே பேசு உன் கடமையைச் செய்து வரும் போது மரணம் நேரினும் அதைரியம் அடையாதே

1 - 4

92. நீ எப்போதும் உன் மனைவியை இனிய மொழிகளால் மகிழ்விப்பாயாக

2 - 4

93. காமம் தலை தூக்கும் போது இறைவனிடம் பிரார்த்தனை செய் அவனது உதவிக்காகக் கதறி அழு பிறகு காமம் தலைதூக்காமல் இருப்பதை நீ பார்க்கலாம்.

4 - 4

94. உள்ளும் புறமும் ஒன்றுபடாதபோதுதான் எல்லாத் தொந்தரவுகளும் அமைதியின்மையும் ஏற்படுகின்றன என்பதை உணர்க

5 - 4

95. உனது முன்னேற்றத்திற்கு வாழ்வு பயன்படுவது போன்று சாவும் பயன்படுகிறது என்பதை இறைவா உனக்கு புகட்டியருள்வாயாக

6 - 4

96. கருத்துடன் என் கடமையைச் செய்வதே உன் வழிபாடு என்பதை இறைவா நான் கற்றுக்கொள்வேனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 - 4

97. நல்ல மனம் என்னும் வீட்டை நான் கட்டிவைத்து இருக்கிறேன். இறைவா நீங்கள் அதில்வந்து குடியிருக்க வேண்டும்

8 - 4

98. பிறர் உன்னை இகழினும், தூற்றினும் உன் அமைதியைக் குலையவிடாதே

9 - 4

99. எவ்வளவு அழுது புலம்பினாலும் சென்றது திரும்பி வராது என்பதை அறிந்து அழுது புலம்புவதால் ஏது பயன் 10 - 4

100. ஆசை என்னும் தீய எண்ணம் உங்களிடம் உண்டாகாமல் இருக்க வேண்டும். ஆசையே பிறவி துன்பத்திற்கு காரணம் ஆசையை விட்டொழியுங்கள்

11 - 4

101. உங்கள் மனக்கவலை துன்பங்கள் ஆகியவற்றை இறைவனிடம் எடுத்துக் கூறி வேண்டினால் நிச்சயமாக உங்களுக்கு அவர் அதனை நிவர்த்தி செய்வார். 12 - 4

102. அஞ்சவேண்டாம் இறைவன் உன்னை காத்துக்கொண்டே இருக்கிறார். அவருக்குரிய பணியை பயபக்தியுடன் செய் மனத்திலிருந்து வீணான நினைவுகளை நீக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 - 4

103. உன்னைத் தாழ்ந்தவனாகவும், தகுதியற்றவனாகவும், ஒரு போதும் நினைக்காதே போனது போயிற்று, கடந்தது கடந்த காலத்தில் அதை குறித்து வருந்தாதே

14 - 4

104. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் இறைவனைக் கூவி அழைத்துக் கொண்டிரு அப்படிச் செய்தால் வாழ்க்கை இன்பம் தரக் கூடிய ஒன்றாக இருப்பதை நீ பார்க்கலாம்

15 - 4

105. நீ செய்யும் காரியத்திற்கு நீயே பொறுப்பாயிருக்க வேண்டும் நீ செய்வதற்குப் பிறர் தண்டனை அடையும்படி ஏற்படக் கூடாது

16 - 4

106. பணம் உன்னை அடிமையாக்கிக்கொள்ளத் துடிக்கும் ஆனால் அதை நீ அடிமையாக்கி வாழ்ந்தால் இல்லற வாழ்வில் ஓர் அளவு இன்பம் காணலாம்

17 - 4

107. ஆண்டவனை மறவாத நிலையிலுள்ள பெரியோர்களுடன் சில காலம் பழகினால் உனது வாழ்வு சிறக்கும்

18 - 4

108. உன் சரீரம் நல்லநிலையில் இருக்கும்போது அதை நீ நன்கு பயன்படுத்தி நற்கதியை அடையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 - 4

109. உனது காலத்தை வீணாக்காதே அது பொன்னிலும் சிறந்தது பொன் போனால் திருப்பி பெறலாம் ஆனால் காலத்தை திருப்பிப் பெற முடியாது ஆகவே உனது இளம் காலத்தில் ஆக்கமான வேலைகளைச் செய்

20 - 4

110 சமூக சேவையில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வீர்களானால் விலை மதிக்கத்தக்க செல்வம் நிறைந்த பொக்கிஷமே கிடைத்தாலும் இத் தொண்டிற்கு கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணை இல்லை

21 - 4

111. எளிய வாழ்க்கை வாழுங்கள் கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள் மனதைத் தூய்மையாக வைத்திருங்கள் உங்களுக்கு சகல வழியிலும் பூரண வெற்றி கிட்டும்.

22 - 4

112. அதிகாரத்தினாலோ, ஆற்றலினாலோ நீங்கள் ஒருபொழுதும் வெற்றி அடையமுடியாது. இறைவனது அருளால்தான் உங்களுக்கு வெற்றி கிட்டும்.

23 - 4

113. கோபம் என்பது ஒரு தற்காலிகமான பைத்தியம் என்பதை உணர்வாயாக.

24 - 4

114. ஏழ்மையின் காரணமாக உன்னைத் தாழ்த்தாதே செல்வத்தின் காரணமாக உன்னை உயர்த்தாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 - 4

115. எந்தத் தவறை நீ எங்கு கண்டாலும் அதை உன்னிடம் திருத்திக் கொள்

26 - 4

116. நாம் பிறரால் கெடுக்கப்பட்டாலும் நாம் பிறரைக் கெடுக்காமல் வாழ்வதுதான் உண்மையான வாழ்வு

27 - 4

117. நல்ல எண்ணங்களை நல்ல முறையிற் செயற்படுத்தாமல் அவைகளைச் சும்மா நினைத்துக்கொண்டிருப்பதால் தான் வாழ்வில் தோல்வி ஏற்படுகிறது

28 - 4

118. மற்றவர்களைக் குறை கூறுவது போல் நீ உன்னைக் கூறிக் கொள் உன்னை நீ மன்னிப்பதுபோல் மன்னித்துக்கொள்

29 - 4

119. உயர்ந்த வைராக்கியத்தில் வெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையில் எதிலும் தோல்வி என்பதே அவர்களுக்கு ஏற்படாது.

30 - 4

120. நீ அன்பு செய்யுமுன் ஆராய்ந்துபார் பின் அந்த அன்பு நிலைக்க வழியைத் தேடிக்கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 - 5

121. உன்னிடம் இருக்கும் திறமையை சக்தியை எந்த அளவுக்கு சமுதாய நலனுக்குப் பயன்படுத்துகிறாயோ அந்த அளவுக்குத்தான் உனக்கு சமுதாயப் பிடிப்பும் உதவியும் கிடைக்கும்

2 - 5

122. பொய் சொல்வது, மற்றவர்களை தூற்றுவது கோள் சொல்வது அளவுக்கு அதிகமாக பேசுவது ஆகியவற்றை நீ கட்டுப்படுத்தினால் உனக்கு முன்னேற்றம் உண்டு

3 - 5

123. மற்றவர்கள் எதை உங்களுக்குச் செய்யக்கூடாது என்று நீங்கள் எண்ணுகிறீர்களோ அதை மற்றவர்களுக்குச் செய்வதை நீங்கள் தவிருங்கள்.

4 - 5

124. உன் குற்றங்களுக்காக உன்னை நீயே வெறுப்பது ஆரோக்கியமான மனநிலைக்கு அறிகுறி அல்ல, சுயவெறுப்பு ஒரு பைத்தியக்கார மனநிலை

5 - 5

125. கடவுள் நம்பிக்கை உனக்கிருந்தால் உன் குற்றங்களை நீயே மன்னித்துக் கொள்ள கடவுள் உனக்கு உரிமையளித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 - 5

126. நீ ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி அதிகம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அது இன்னும் உன்னை அதிகமாகப் பாதிக்கும்.

7 - 5

127. அளவுக்கு அதிகமாக பேசுதலும், அளவுக்கு அதிகமாக பிறருடன் பழகுதலும் ஆன்மிகப் பாதைக்கு தடையாக இருக்கும் என்பதை நினைத்துக்கொள்.

8 - 5

128. அன்றாடச் செயல்முறைக்கு ஒரு திட்டம் தீட்டிக்கொண்டு அதைப் பிசகாது கடைப்பிடியுங்கள் சோம்பல் உங்களை அணுகாது.

9 - 5

129. உங்களிடம் உள்ள குறைகளைக் கண்டு அவற்றை அகற்றுங்கள். பிறரிடம் உள்ள நிறைகளைக் கண்டு அவற்றைப் போற்றுங்கள் குற்றம் காணும் குணத்தை விடுத்து நல்லதைக்காணும் திறனை வளருங்கள்.

10 - 5

130. ஒழுங்காக நீங்கள் தியானம் செய்தால் அமைதியான உறக்கத்தை நீங்கள் பெறலாம்.

11 - 5

131. ஒன்றும் உங்களுடையதல்ல அனைத்தும் ஆண்டவனுடையதே என எண்ணுங்கள் இதுவே இறைவனைச் சரணடைவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 - 5

132. கடவுளிடம் உங்களுக்கு நம்பிக்கை குறையும்பொழுது தீய சக்திகள் பலவும் உங்களை ஆக்கிரமிக்கின்றன.

13 - 5

133. கோபத்தில் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள் அதை ஆழ்ந்த தியானத்தில் பயன் படுத்துங்கள். 14 – 5

134. நீங்கள் எவ்வளவு பலசாலியாயிருந்தாலும், அறிவாளியாக இருந்தாலும் மனச் சோர்வுக்கு இடமளித்தால் உங்களது அனைத்து பலமும் அறிவும் பறந்தோடிவிடும். 15 - 5

135. நேற்றுப் போய்விட்டது அதை மறந்து விடுங்கள் நாளை நம்மிடம் இல்லை அதைப்பற்றி கவலைப்படாதீர்கள். இன்று இருக் கிறது அதைச் சரியாகப் பயன்படுத்துங்கள் 16 – 5

136. எப்பொழுவம் உங்கள் சுய சிந்தனையைப் பயன்படுத்திக் காரியத்தில் இறங்குங்கள். அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள் இவர்கள் அப்படி எண்ணுகிறார்கள் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு காரியத்தில் இறங்கினால் உங்களுக்கு தோல்வியே கிடைக்கும்

17 – 5

137. நீங்கள் உங்கள் தனித் தன்மையை இழந்து விடக்கூடாது உங்களுக்கென ஒரு சுய சிந்தனை வேண்டும் வாழ்க்கை முன்னேற்றத் திற்கு அது மிகவும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 - 5

138. தனக்குத் தானே தாழ்வு மனப்பான்மை கொண்டிருப்பது வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருக்கும் என்பதை அறிந்து கொள். 19 - 5

139. பிறரைவிட நம்மை தாழ்வாக எண்ணிக் கொண்டால் நம்மை இவ்வுலகம் தலைதூக்காமல் செய்துவிடும் என்பதை அறிந்துகொள் 20 - 5

140. பிறருடைய நட்பைப் பெற நீங்கள் அவர்கள் பால் அன்பு செலுத்தினால் மாத்திரம் போதாது நீங்கள் அன்பு செலுத்துவதை அவர்கள் நன்கு உணருமாறு செய்ய வேண்டும் 21 - 5

141. மனதை நிலைப்படுத்தி அமைதியாக அமருங்கள் அன்புடன் ஆண்டவனை வேண்டுங்கள் இடையறாது அவன் நாமத்தை உச்சரியுங் கள் உங்கள் இதயத்தில் அவர் தோன்றுவார் 22 - 5

142. ஒரு மனிதனின் வெளித் தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவ னென்றோ தீயவனென்றோ உறுதி செய்து விடாதே உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய் 23 - 5

143. உன் இனத்தைவிட்டு நீ பிரிந்து விட்டால் நீ எல்லோராலும் வெறுக்கப்படுவாய் ஆகவே உன் இனத்துடன் நீ ஒற்றுமையாக இரு அப்போதுதான் உனக்கு உயர்வும் மதிப்பும் அழகும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 – 5

144. நாளைய கவலைகளை எண்ணி இன்றைய தினத்தைப் பாழாக்கிக் கொள்ளாதே சிலவேளை நாளை கவலைகள் வராமலேயே விடலாம் ஆனால் நீயே இன்றைய சந்தோஷத்தையும் இழந்து விட்டிருப்பாய்

25 – 5

145. உனது காலத்தை வீணாக்கிறது மரணத்தைவிடக் கொடியது என்பதை நினைத்துக்கொள்.

26 – 5

146. எந்த தர்மத்தை உறுதியாகவும் நியமத்துடனும் நீ போற்றி அனுஷ்டித்து வருகிறாயோ அதே தர்மம் உன்னை எப்போதும் காப்பாற்றும்.

27 – 5

147. நல்லவர்களாக இருக்கவும் நன்மையைச் செய்யவும் முயற்சி செய்யும் அனைவருக்கும் உதவி புரியவும்

28 – 5

148. இந்த உடலில் சக்தியும் உள்ளத்தில் விழிப்பு உணர்வும் இருக்கும் போதே இறைவனைத் தேடி உணர்ந்து கொள்ளவேண்டும். இவை மங்கிப்போகும் நிலையில் அதற்குரிய கூர்மையான சிந்தனை கிடைக்காது.

29 – 5

149. மற்றவர்களைப் பற்றி பேசுவதற்கு முன்னால் உங்கள் தகுதி என்ன? எந்த அளவுக்கு உங்களால் செயல்பட முடியும் என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 - 5

150. உனக்குச் சந்தேகமோ அல்லது துன்பமோ வரும்போது கண்ணீர் மல்க இறைவனை வேண்டு. இறைவன் உன்னிடமுள்ள குற்றங்களைப் போக்கி உன் மன வேதனையை அகற்றி உனக்கு ஞானத்தை அருள்வான் 31 - 5

151. உன்னிடம் உயர்ந்த இலட்சியம் இல்லையென்றால் நீ ஒரு மனிதனாக இருந்து வாழமுடியாது.

## ஜூன் — 06

1 - 6

152. ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடங்குங்கள் அன்பில் செலவழியுங்கள் அன்போடு முடியுங்கள். ஒவ்வொரு நாளையும் அன்பால் முழுக்கடியுங்கள் இதுவே இறைவனிடம் கொண்டுசேர்க்கும் வழி 2 - 6

153. பெரியோர்களின் சொற்களைப் பொருட்படுத்தாமல், செருக்கினால் செய்யப்படும் காரியம் தனக்குக் கேடு விளைவிக்குமானால் அதைக் குறித்து வருந்துவதில் பயனில்லை 3 - 6

154. எப்பொழுதும் மற்றவர்களுக்கான உன் கடமைகளைச் செய்துகொண்டிரு. ஆனால் கடவுளிடம் மட்டும் அன்பு செலுத்து. உலக அன்பு சொல்லொண்ணாத் துன்பத்தையே தரவல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 - 6

155 கவலைப்படாதே அலைபாய்வது மனத்தின் இயல்பு இறைவனின் நாமம் புலன்களைவிட மிகவும் வலிமை வாய்ந்தது சிலவற்றைச் செய்ய நினைத்து அதை செய்யாமல் விட்டதற்காக கவலைப்படாதே

5 - 6

156. வீணாகப் பொழுதைப் போக்காதீர்கள் ஒவ்வொரு விநாடியும் உங்களின் பொன்னான காலத்தை நீங்கள் இழந்து கொண்டே இருக்கிறீர்கள்

6 - 6

157. நிச்சயமாக உன் செல்வத்தால் மட்டும் நீ மக்களுக்கு உதவி செய்யமுடியாது. எனவே புன்னகையுடனும் நற்பண்புடனும் மற்றவர்களுக்கு உதவுங்கள்.

7 - 6

158. பசிக்கிறது என்று தங்களிடம் வந்தவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். பிறர்க்கு கொடுப்பதனால் நீ உணவின்றி இறந்தால் அக்கணமே நீ தெய்வமாகலாம்.

8 - 6

159. உன்னால் எதைச் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்களோ அதைச் செய்து காட்டுவதுதான் பெரிய இன்பம் அதில் இறைவனின் சாத்வீகமும் அடங்கி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 - 6

**160.** உனக்கு உள்ள காலம் மிகக் குறைவு அதை வீணாக்க வேண்டாம். ஏதும் ஓர் நல்ல காரியம் செய்ய முயலுங்கள். அவன் என்ன செய்கிறான் இவன் என்ன செய்கிறான் அதை ஏன் அவன் செய்கிறான் என்ற பிறரின் செயல்களை விட்டுவிட்டு நீ நற்காரியங்களில் ஈடுபடு.

10 - 6

**161.** உனக்கு ஆசையிருப்பது குற்றமல்ல ஆனால் பேராசைக்கு இடமளிக்க கூடாது

11 - 6

**162.** மற்றவர்கள் உன்னைப் புரிந்துகொள்ளும்வரை நீ பொறுமையாயிரு

12 - 6

**163.** அமைதியாகப் பேசுங்கள் அது உங்கள் ரகசியங்களை பாதுகாக்கும். உண்மையை பேசுங்கள் அது உங்கள் வார்த்தைகளைப் பாதுகாக்கும்.

13 - 6

**164.** கடவுள் உங்களது சிந்தனைகளையும் செயல்களையும் கண்காணிக்கிறார் அவரே சாட்சி எனவே பொய் சொல்லாதீர்கள் எவரையும் ஏமாற்றாதீர்கள்

14 - 6

**165.** உன்னிடமும் என்னிடமும், மற்ற எல்லா இடங்களிலும் இறைவன் இருக்கிறார் பொறுமை இல்லாததால் நீ என்னிடம் தேவையில்லாமல் கோபம் கொள்ளுகிறாய் இறைவனை நீ அடைய விரும்பினால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமநிலை மாறாத மனநிலையுடன் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 - 6

**166.** உனது இதயத்திலிருந்து அகங்காரம் முழுவதும் நீங்க வேண்டும். நான்தான் பெரியவன் எனக்குத்தான் எல்லாம் தெரியும் நான் சொல்லுவதுதான் சரி என்ற எண்ணங்கள் இருந்தால் அவனின் இருதயத்தில் ஒருபோதும் ஈஸ்வரன் தோன்ற மாட்டான் **16 - 6**

**167.** நீங்கள் ஒருவருடன் கதைக்கும் போது அவரால் உங்களுக்கு ஏதும் நன்மையிருப்பின் தொடர்ந்து கதையுங்கள் அப்படி இல்லாவிடின் விட்டுவிலகுங்கள் **17 - 6**

**168.** உங்களது தவறையும் குறைகளையும் ஒப்புக்கொள்ளுங்கள் அப்பொழுதுதான் நீங்கள் திருந்த வழிபிறக்கும் **18 - 6**

**169.** உங்களது மனதை ஏதாவது நற்காரியத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள் **19 - 6**

**170.** காலமே உன்உயிர் அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்வது போலாகும். **20 - 6**

**171.** அமைதியாக இருங்கள், நீங்கள் எவரையும் வசப்படுத்திக் கொள்ளமுடியும் **21 - 6**

**172.** உன் சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் மிகமிக நேர்மையோடு இருப்பதே நீ செய்யும் மிகப்பெரிய தவமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 6

173. பிறர் உனக்கு செய்த உதவியை எப்போதும் நினைத்திருப்பாயாக 23 - 6

174. உன்னை பெருமைப் படுத்தியும் மற்றவர்களை இழிமைப் படுத்தியும் பேசாதே. 24 - 6

175. கடமையைச் செய் புகழ் உன்னைத் தேடிவரும். செல்வாக்கும் மதிப்பும் தானாகவே ஏற்படும். 25 - 6

176. மனம் வாக்கு காயங்களால் பிறருக்கு நீ செய்யக்கூடிய உதவியை உன்னால் முடியாது என்று சொல்லாதே

26 - 6

177. எல்லாம் தெரிந்துவிட்டது என்று நினைத்தால் நீங்கள் அறியாத மேதை தெரிந்தும் தெரியாது போல் இருந்தால் நீங்கள் அறிவிற் சிறந்த மேதை 27 - 6

178. அவசரப்பட்டு ஒன்றையும் முடிவுசெய்யாதே.

28 - 6

179. உங்களுடைய குற்றங்களை எடுத்துக்காட்டும் மனிதர்களிடம் நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும் 29 - 6

180. நீ பேசிய பிறகு வருந்துவதைவிட்டு பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது மிகவும் நல்லது 30 - 6

181. நம்பிக்கையை கைவிடாதே அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 - 7

**182.** பண்பட்ட மண்ணில் தான் விதையின் சக்தி பாய்கிறது பண்பட்ட உள்ளத்தில்தான் பண்பும் அன்பும் முளையிட முடியும் என்பதை நிலைவில் வை. 2 - 7

**183.** நீ உன்னை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொண்ட பிறகு நீ உன்னைப் பாதுகாத்துக் கொள்ள அவசியமே இல்லை

3 - 7

**184.** உனக்குப் பேச்சுரிமை உண்டு அதில் யாரும் குறுக்கிடக் கூடாது. ஆனால் உன்னுடைய பேச்சு ஏச்சாக ஆகிவிடக்கூடாது

4 - 7

**185.** உனக்கு தாழ்வு மனப்பான்மை என்ற பலவீனம் ஒரு குறைந்த பட்ச அளவு இருந்தால்கூட உன்னால் வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது 5 - 7

**186.** உன்னிடம் பேச்சு அதிகமாக இருக்கிறது என்றால் நீ செயல் திறன் இல்லாத சோம்பேறியாகத்தான் இருப்பாய் 6 - 7

**187.** வீண் பேச்சில் உனது சக்தியை வீணாக்க வேண்டாம். முடிந்த வரை உன் சிந்தனைகளுக்கு வலுவூட்டு. பேசுவதை விட்டுவிட்டு செயலில் காட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 - 7

188. நீ எந்த முயற்சியிலும் துணிச்சலாக ஈடுபடு. இது உனது வாழ்க்கைக்கு வெற்றியளிக்கும். 8 - 7

189. எண்ணத்தினாலோ, வார்த்தைகளினாலோ, செயல்களினாலோ யாருக்கும் தீங்கு செய்யாதீர்கள். எல்லோரிடமும் அன்பாக இருங்கள். 9 - 7

190. எவரோடும் சண்டையிடாதே, யாரையும் பழி வாங்காதே எவரையும் அவதூறாகப் பேசாதே 10 - 7

191. நீ வாழ்க்கையில் உயர்வும் உய்வும் பெற இறைவனுடைய திருவடியே கதி என்று இரு 11 - 7

192. உங்களால் தியானம் செய்ய முடியாவிட்டால் பிரார்த்தனையிலாவது ஈடுபடுங்கள் 12 - 7

193. உன்னுடைய கடமையைச் செவ்வனே செய் உனக்கு ஞானம் உண்டாகும். 13 - 7

194. நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யும் உதவிகளை அப்போதே மறந்து விடுங்கள். மற்றவர்கள் உங்களுக்குச் செய்யும் உதவிகளை ஒருபோதும் மறவாதீர்கள். 14 - 7

195. பெருமையோ இகழ்ச்சியோ தானே வருவதில்லை உங்கள் கடமைகளை மிகவும் நன்றாகச் செய்யுங்கள் எல்லாப் பெருமையும் அதில்தான் அடங்கியிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 - 7

**196.** உன் மனத்தில் எதையும் மறைத்து வைக்காதே நாளடைவில் அது உன்னையே பிறரிடமிருந்து மறைத்து விடும். 16 - 7

**197.** நீ நன்மையடைய விரும்பினால் மற்றவர்களுக்கு நன்மை செய். 17 - 7

**198.** முடியாது என்று ஒருபோதும் சொல்லாதே அது சோம்பேறிகளின் வாய் உச்சரிக்கும் வீண்சொல் 18 - 7

**199.** ஓநாயுடன் வசித்தால் நீ ஊளையிடத்தான் கற்றுக் கொள்வாய் 19 - 7

**200.** இறைவா, எனக்கு உயிரளித்தது போல் நன்றி நிறைந்த இதயத்தையும் அளிப்பாயாக

20 - 7

**201.** ஒரு நல்ல காரியத்திற்காக எத்தனையோ பேர் கூடி எவ்வளவோ காலம் பாடுபட்டு செய்வதற்கு தடையாக இராதே

21 - 7

**202.** நீ முதலில் தவறு செய்யும்போது சிறிய தவறுதானே என்று அலட்சியமாக இருந்துவிட்டால் அதுவே பின்னால் அத்திவாரம் அமைத்ததாக ஆகிவிடும் 22 - 7

**203.** அறிமுகமில்லாத ஒருவன் உன்னிடம் இனிக்க இனிக்கப் பேசுகிறானோ அவனிடம் எச்சரிக்கையாக இரு. ஏமாற்றி பயன் பெற விரும்புகிறான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 - 7

**204.** உன் வாழ்நாளில் நீ பெறவேண்டிய மகத்தான சக்தி உன்னை அன்பு மயமாக மாற்றிக் கொள்வதுதான்

24 - 7

**205.** உங்கள் மனத்திலே அசைக்க முடியாத உறுதியும், சிதைக்க முடியாத நம்பிக்கையும் இருந்தால் இந்த உலகத்தில் சாதிக்கமுடியாத விஷயங்களே இருக்காது.

25 - 7

**206.** நீ உன்னைக் கண்டுதான் அச்சப்படவேண்டுமே தவிர மற்றவர்களைக் கண்டு அல்ல உன்னைக் கண்டு நீயே அச்சப்படும்போது உன்னை நீயே உயர்த்திக் கொள்ளமுடியும்

26 - 7

**207.** மக்கள் உன்னை மதிக்காவிட்டால் அதைப் பொருட்படுத்தாதே. ஆனால் அவர்கள் உன்னைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் அதற்காக கவலைப்படு

27 - 7

**208.** மனித சமூகம் மதிக்கவில்லை என்பதற்காக உங்கள் நல் இயல்புகளை மாற்றிக் கொள்ளாதீர்கள்

28 - 7

**209.** உன் லட்சியத்தை அடைய ஆயிரம் தடவை முயற்சி செய் அப்படியும் லட்சியத்தை அடைய முடியவில்லை என்றால் சில நூறு தடவை முயற்சி செய் லட்சியம் ஈடேறும்வரை தொடர்ந்து முயற்சி செய்துகொண்டேயிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 - 7

210. வாழ்க்கையில் துரிதமாக முன்னேறியாக வேண்டும் என்பது உன்னுடைய குறிக்கோளாக இருந்தால் சோம்பி உட்காராதே கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவ விடாதே. கடுமையாக உழை.

30 - 7

211. உனது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் உனது ஆத்ம வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன ஆகவே துன்பத்தைக் கண்டு கலங்கக் கூடாது

31 - 7

212. மற்றவர்களுடைய துயரத்தைக் கண்டு இரக்கப்படுங்கள் ஆனால் உங்களுடைய சொந்தக் கஷ்டங்களை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள்.

## ஆகஸ்ட் — 08

1 - 8

213. நமக்குக் கடவுளால் விதிக்கப்பட்ட கடமை பிறருக்கு உதவி புரிவதும், உலகிற்கு நன்மைசெய்வதுமே

2 - 8

214. நெஞ்சில் உள்ளதையே வாயால் சொல்லு, உன்னுடைய சொல்லுக்கும் நினைவுக்கும் நெருக்கமான ஒற்றுமை இருக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 - 8

**215.** உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு ஏற்கனவே நடந்து முடிந்தவை குறித்து வருந்தாதே. உன்னுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் சிந்தனையும் உயர்ந்ததாக இருக்கட்டும்

4 - 8

**216.** இறைவா நான் பணம், பெயர், புகழ் உடல் இன்பம் போன்ற எதையும் விரும்பவில்லை. உன்னுடைய பாத கமலங்களில் தூய பக்தி ஏற்படும்படி செய்.

5 - 8

**217.** எனக்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான் இறைவா அது உன்னுடைய பாதகமலங்களில் தூய பக்தி அதை நீ எனக்கு தந்தருள்வாய்

6 - 8

**218.** ஒரு பெண்ணையும் அழவைக்காதே. ஏனென்றால் தெய்வம் அவள்விடும் கண்ணீர்த்துளி ஒவ்வொன்றையும் எண்ணி நோக்குகிறது

7 - 8

**219.** உன்னுடைய வாழ்க்கையை நினைத்துப்பார், ஊன்றி நினைத்தால் விளங்கும் என்ன சுகத்தைக் கண்டாய்

8 - 8

**220.** நீங்கள் நல்லபடியாக எத்தனை நாள் வாழ்ந்தீர்கள் என்பதை விட நீங்கள் நல்லபடியாக எத்தனை பேரை வாழ வைத்தீர்கள் என்பது இவ்வுலகில் முத்திரையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 - 8

221. உலகில் நீ வாழும்போது உலகத் துன்பம் உன்னைப் புண் படுத்தாமலிருக்க இறைவனை எப்போதும் நினைத்துக் கொண்டிரு

10 - 8

222. நீ துன்பமின்றி இன்பமாக வாழவேண்டும் என்றால் மற்ற வர்க்கு மன வாக்குக் காயங்களால். துன்பம் செய்யக்கூடாது. நன் மையே செய்தல் வேண்டும். இதுதான் உண்மையான பண்பாடு.

11 - 8

223. நீ மற்றவர்களுக்கு உதவி செய்யாத பட்சத்தில் மற்றவர் களிடமிருந்து உதவியை நீ எதிர்பார்ப்பது நியாயமில்லை.

12 - 8

224. மற்றவர்களை நீங்கள் மதிக்க வேண்டியதுதான் ஆனால் அதைவிட முக்கியமானது உங்களை நீங்களே மதித்துக் கொள்ள வேண்டும்.

13 - 8

225. நீ வாழ்க்கையில் பெறுவது அற்பம், இழப்பது அதிகம்

14 - 8

226. எவரையும் இழிவாகப் பேசாதே இறை நம்பிக்கை அற்றவ னும் இறைவனை நம்புபவனும் அவனால் படைக்கப்பட்டவர்கள் தான்.

15 - 8

227. உங்கள் முன்னே அடர்ந்திருக்கும் இருளை அகற்றுங்கள் கிழக்கிலிருந்து தோன்றும் சூரியனைப் போல் எழுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 - 8

228. உங்களிடமுள்ள அன்பு, சந்தேகங்கள் அனைத்தையும் எரித்து விடட்டும்.

17 - 8

229. கோள் கூறப்படுவதைக் கேட்பவன் இல்லையாயின் கோள் சொல்பவனும் இல்லை என்பதை அறிந்து கொள்

18 - 8

230. நம் குற்றங்கள் இவை என்று நமக்குத் தெரிவித்து அவற்றை நீக்கி, நன்னெறியை நமக்குப் போதிக்கிறவர்களே நமக்கு மேலான நண்பர்கள்.

19 - 8

231. உங்கள் நண்பர்களிடம் உங்கள் ஏழ்மை நிலையைப் பற்றிப் பேசாதீர்கள்

20 - 8

232. நல்லவரோடு நட்புக் கொண்டு பின்பு அவரைவிட்டுப் பிரியாதீர்கள்

21 - 8

233. உங்கள் புகழையோ கல்வி முதலிய சிறப்பையோ நீங்களே புகழ்ந்து பேச வேண்டாம்

22 - 8

234. கணவன் சொல்லுக்கு மாறுபட்டு நடக்காதிருப்பதே பெண்களுக்குரிய கற்பாகும்

23 - 8

235. நீங்கள் ஒருவரிடத்தும் பொறாமை கொண்டு பேசாதீர்கள் கண்ணால் கண்டபிறகு மாறாகச் சொல்லாதீர்கள். கேட்போருக் இன்பமுண்டாகும்படி இனிமையாகப் பேசுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 - 8

236. நீங்கள் பிறரை அடித்து வாழலாம் ஆனால் நீங்கள் ஒருவரை கெடுத்து வாழாதீர்கள் அந்த கேடு மீண்டும் உங்களையே தொடர்ந்து வந்து பாதிக்கும்

25 - 8

237. பிறரைக் குத்தி குதர்க்கம் பேசினால் நீங்கள் குழப்பக்காரர் பிறரைச் சுற்றிச் சுழித்துப் பேசினால் நீங்கள் நுன்யக்காரர்

26 - 8

238. பிறர் உங்களை உயர்த்துகிறார்கள் என்றால் நீங்கள் உயர்ந்து விட்டதாய்ப் பொருள் அல்ல ஆனால் நீங்கள் அந்த உயர்வுக்கேற்றவராய் மாறி நடந்துகொள்ள வேண்டுமென்றுதான் பொருள்

27 - 8

239 நீங்கள் பிறருக்கு உபகாரம் செய்யமுடியாமல் போகலாம் ஆனால் அவர்களுக்கு உங்களால் அபகாரம் ஏற்படாமல் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள் அதுவே நீங்கள் பிறருக்குச் செய்கின்ற உபகாரம்.

28 - 8

240. உங்கள் வாழ்க்கையில் சோதனைகள் வருவது உங்களைப் பரீட்சிக்க, அவற்றில் நீங்கள் வெற்றி பெற்று விட்டால் இந்த உலகத்தையே வென்று விட்டதாய்ப் பொருள் பிறகு உங்களைவிட நிம்மதியாய் இவ்வுலகில் எவரும் வாழ்ந்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 - 8

241. எல்லாம் தெரிந்து விட்டது என்று நினைத்தால் நீங்கள் அறியாத மேதை தெரிந்தும் தெரியாதது போல் இருந்தால் நீங்கள் அறிவிற் சிறந்த மேதை

30 - 8

242. நீங்கள் புரிந்து கொள்ளாமல் செய்கிற பல காரியங்களைவிட புரிந்து கொண்டு செய்கிற ஒரு காரியம் உங்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறும்

31 - 8

243. நல்ல காரியம் செய்யத் துணிந்து விட்டாலே அவன் அறிஞனாகி விடுகிறான். தீய காரியம் செய்யத் துணிந்து விட்டால் அவன் அசடனாகி விடுவான்.

## செப்ரெம்பர் — 09

1 - 9

244. உனக்கு ஏதும் கவலைகள் இருப்பின் தனியான இடத்தில் தங்கிக் கண்ணீர் மல்க ஆண்டவனையே வேண்டுக அவன் உன் மனத்திலுள்ள அழுக்கையும் துயரத்தையும் போக்குவான் பின்பு உனக்கு எல்லாவற்றையும் விளங்கும்படி செய்வான்.

2 - 9

245. மனிதப்பிறவி பெற்றதால் நீ பாக்கியவான் உன்னால் முடியுமளவுக்கு ஆண்டவனை துதி செய் நீ கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் உழைக்காமல் எதையும் அடைவது முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**246.** உனது மரணத் தருவாயில் இறைவனை மட்டும் தியானித்துக் கொண்டே உயிர் விடுவாயானால் நீ இறைவனை அடைவாய் என் பதில் சந்தேகம் இல்லை 3 - 9

**247.** நீங்கள் பிறரை அடுத்து வாழலாம் ஆனால் நீங்கள் ஒருவரைக் கெடுத்து வாழாதீர்கள். அந்தக்கேடு மீண்டும் உங்களையே தொடர்ந்து வந்து பாதிக்கும். 4 - 9

**248.** உன்னுடைய தவறுகளை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்பு கேட்பதும், உனக்கு மேன் மேலும் நற்குணத்தையும் சக்தியையும் தர வேண்டுமெனக் கேட்பதும் அவசியமானது 5 - 9

**249.** இறைவனை வணங்கும்முன் உனது மனதைப் பரிசுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும் 6 - 9

**250.** நீ தீய வழியில் நடந்து கொண்டு கோயிலுக்கு போய் இறைவனை வணங்குவதில் ஓர் பிரயோசனமுமில்லை அதனால் ஏற்படும் கஸ்டம் உனக்கு உடன் தெரியாவிட்டாலும் காலகதியில் தெரியவரும் என்பதை மறவாதே 7 - 9

**251.** உன்னை பெற்று வளர்த்து இவ்வுலகில் நீ சுக வாழ்வு வாழ வழி செய்த உன் பெற்றோரை அவர்களின் வயது காலத்தில் நன்றாக கவனிக்க வேண்டியது உன்னுடைய முக்கிய கடமையாகும் 8 - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 - 9

252. கெட்ட நினைவுகளை ஒழித்து நல்லெண்ணங்களை வளர்க்க இடைவிடாமல் முயற்சி செய்யுங்கள் இதுவே நல்ல ஊக்கம்

10 - 9

253. வீண் எண்ணங்களை கைவிட்டு உள்ளத்தை உண்மையாக திறந்து வையுங்கள், அற ஒழுக்கத்தை கையாண்டு நிலையான இன்பத்தை அடையுங்கள்

11 - 9

254. கனவு போன்ற நிலையில்லாத காதல் இன்பத்திலிருந்து ஒரு நிலைப்படுத்த வேண்டும். காம ஆசைக்கு இடம் கொடுத்தால் திருத்தியடைய முடியாது

12 - 9

255. உன் உடலை வளர்க்கும் பொருட்டும் உன் நாவுக்கு சுவையூட்டும் பொருட்டும் ஜீவன்களை கொலை செய்யாதே. உயிர்க் கொலை மூலம் வளர்க்கப்படும் உனது உடல் மிகவும் குறுகிய காலத்தில் அழியக் கூடியதே

13 - 9

256. எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிரு. ஆறறிவு படைத்த மக்களிடம் அன்பாயிருப்பது போலவே வாயற்ற ஜீவன்களான மிருகங்கள் பட்சி பறவைகள் முதலியனவிடத்தும் அன்பாக இரு அதுவே எக்காலத்தும் உனக்கு பேரின்பத்தை அளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 - 9

257. உங்கள் கண்ணீர் துளிகள் உங்கள் உள்ளத்தின் அறியாமையை காட்டுகின்றது. உயர்ந்த சாந்தியை பெற உணர்ச்சியை வென்று அடக்க வேண்டும்.

15 – 9

258 அறிவு பெற்றவர் அனைவரும் காம இன்பங்களை நீக்குகின்றனர். நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால் உடல் இன்பங்களை வெறுத்து தள்ளுங்கள்.

16 - 9

259. நாம் செய்த செயல்களிலிருந்து தப்பவே முடியாது. ஆதையால் நல்ல செய்கைகளே செய்க

17 – 9

260. நமது உள்ளங்களை துருவி பார்க்க வேண்டும். அவற்றால் தீய செயல்கள் விளைந்துவிடாமற் கவனிக்க வேண்டும் ஏனெனில் நாம் விதைத்ததை நாமே அறுவடை செய்ய வேண்டியிருக்கும்

18 - 9

261. நீங்கள் உபகாரங்களையோ போலி புகழுரைகளையோ விரும்பாமலிருங்கள்

19 – 9

262. சத்தியத்தையே அடைக்கலமாக உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள்

20 - 9

263. நீ மூடின கைகளுடன் உலகிற்கு வருகிறாய், திறந்த கைகளுடன் போக கற்றுக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 - 9

264. நீங்கள் உங்கள் அகத்தில் இறைவனை உணர்ந்தால் அழுக்குகள் நீங்கிப் போகும். 22 - 9

265. தர்மம் செய், நீ ஒருபோதும் ஏழையாகமாட்டாய். களவு எடுத்து ஒருபோதும் நீ பணக்காரனாக மாட்டாய் 23 - 9

266. ஓம் "நமசிவாய" என்ற மந்திரத்தை தினமும் ஓதுங்கள். உங்களுக்கு முன்னேற்றம் உண்டு 24 - 9

267. நீங்கள் உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்காகப் போட்டுள்ள திட்டங்கள் எதுவானாலும் அது இன்று போடப்பட்ட விதை என்று நினையுங்கள் அதையே விடாமல் சிந்தியுங்கள் அது சிலகாலத்திற்குள் கைகூடிவிடும் 25 - 9

268. சூரியன் உதிக்கும் முன் பூசை அறையில் அமர்ந்து கொண்டு உங்கள் திட்டங்களை உங்கள் பிரிய தெய்வத்திடம் ஒப்படைத்துத் தியானம் செய்யுங்கள் அத் திட்டங்கள் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் 26 - 9

269. தீய திட்டங்களைப் போட்டுக் கொண்டு தயவு செய்து தெய்வத்தை அணுகவேண்டாம் பிரார்த்தனை வலுவாக இருந்தால் அது உங்களுக்கு வெற்றி கிட்டும் பின் நீங்களே சுமக்கவேண்டி இருக்கும் பின்பு வருத்தப்பட்டு பயன் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 - 9

270. நீங்கள் உங்களுக்கு ஆகாதவற்றைப்பற்றி அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள். அதுவே உங்கள் பலவீனத்தை அதிகரிக்கப் படுத்தும்.

28 - 9

271. உங்களைப் புரிந்து கொள்ளாத பொழுது இவ்வுலகம் உங்களைத் தூற்றும், உங்களைப் புரிந்துகொண்ட போது இவ்வுலகம் உங்களைப் போற்றும்

29 - 9

272. உங்களுக்கு முன்னால் நடக்கக்கூடிய இன்ப நாட்களிலேயே மூழ்கி வாழ்ந்துவிடாதீர்கள் உங்களுக்குப் பின்னால் வரக்கூடிய துன்ப நாட்களைக் கண்டு அஞ்சி வாழுங்கள்

30 - 9

273. நீங்கள் நல்லதைப்பற்றியே சிந்தியுங்கள் உங்களிடமுள்ள தீமைகளெல்லாம் பறந்துபோய்விடும். நீங்கள் தீமையைப்பற்றிச் சிந்தித்தால் உங்களிடமுள்ள நல்லவையெல்லாம் பறந்து போய்விடும்

## அக்டோபர் — 10

1 - 10

274. கோழைத் தனத்தை குழியில் போடுங்கள் ஏழை எளியார் வாழ உங்கள் கரங்களை நீட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 - 10

275. உங்களை நீங்கள் நம்புங்கள் உண்மையை நம்புங்கள் ஊரார் பேச்சை நம்பாதீர்கள்

3 - 10

276. ஒருவரின் நற்கொள்கையை ஏற்றுக்கொள்ளுங்கள் ஆனால் நீங்கள் அவரின் ஒழுக்கமில்லாத செயலுக்கு தாளம் போடாதீர்கள்

4 - 10

277. ஒன்றைப்பற்றி நீங்கள் சிந்தித்தால்தான் அந்த ஒன்றைப்பற்றி நீங்கள் புரிந்து கொள்ள முடியும்

5 - 10

278. பிறரின் நல்ல கருத்துக்களை, நல்ல செயல்களைச் சிரணிக்க முடியாதவர்கள் தான் சமுதாயத்திலே அயோக்கியர்கள்.

6 - 10

279. உங்கள் ஒழுங்கும் நேர்மையும் என்றாவது ஒருநாள் உங்களை உயர்த்தும். பொறுத்திருங்கள் அப்படி உயரும்போது அது எவராலும் அழித்துவிட முடியாததாய் இருக்கும்.

7 - 10

280. பிறர் அருவருக்கத்தக்க சொற்களை உபயோகப் படுத்தாதீர்கள் அது என்றாவது ஒருநாள் உங்களையே சுடும்

8 - 10

281. பிறரை மதியுங்கள், பிறர் மதிக்க வாழுங்கள், பிறரை அவமதிக்காதீர்கள், பிறர் அவமதிக்க வாழாதீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 - 10

282. வீணாகப் பொழுதைப் போக்காதீர்கள் ஒவ்வொரு விநாடியும் உங்களின் பொன்னான காலத்தை நீங்கள் இழந்து கொண்டே இருக்கிறீர்கள் 10 - 10

283. பிறர் சொல்வதை உற்றுக் கேளுங்கள் உங்களுக்குச் சரி என்று பட்டதை எடுத்துக் கொள்ளுங்கள் 11 - 10

284. உன்னுடையது, என்னுடையது என்பது இல்லாவிட்டால் உலகம் சுவர்க்க உலகமாக இருக்கும் 12 - 10

285. ஒருவன் பிறர்மேல் பழிச் சொற்களைச் சொன்னால் அவன் எல்லோருக்கும் பகைவனாவான் 13 - 10

286. வரவுக்கதிகம் செலவு செய்யாதே, தொல்லைகளின்றி வாழ விரும்புவாயாயின் உன் தேவைகளைச் சுருக்கிக்கொள்

14 - 10

287. ஆன்மிக நூல்களை நிறையப் படித்து பின் அவற்றை பிறருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி அவர்களைப் புரிந்து கொள்ள வைப்பது ஓர் பெரிய புண்ணிய காரியமாகும் 15 - 10

288. நம்மால் வெகுவாக நேசிக்கப்படுகிறவர்கள் இறந்து விடுகிற பொழுதுதான் மரணத்தின் அர்த்தத்தை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 - 10

289. நாம் வெறுமனே வாழ்ந்தால் மட்டும் போதாது நமது பெயர் அமரத்துவம் என்னும் திரைச் சீலையில் எழுதப்பட வேண்டும்

17 - 10

290. நான் உனக்கு ஒன்று சொல்லுகிறேன் வாழ்க்கையில் உனக்கு அமைதி வேண்டுமென்றால் மற்றவர்களின் குறைகளைப் பார்க்காதே அதற்குப் பதிலாக உன்னிடம் இருக்கும் குற்றங்களையே பார்

18 - 10

291. உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம் இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு

19 - 10

292. நீ எந்த அளவுக்கு உயர்ந்தவனாகினாயோ அந்த அளவுக்குத் தக்கபடி நீ கடுமையான சோதனைகளையும் கடந்து செல்ல வேண்டும்

20 - 10

293. உனது நெஞ்சுக்குத் துரோகம் செய்யாதே, மனச்சாட்சியின் படி நட நிச்சயமாக உனக்கு வெற்றி கிடைக்கும்

21 - 10

294. பொய் மிகவும் கொடியது. பொய்வேடமும் கொடியது உன் வேடத்திற்குத் தகுந்தபடி உன் மனம் இல்லாமலிருந்தால் நீ பெரும் நாசமடைவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - 10

295. பிறர் எதைச் செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அதை நீயே செய்

23 - 10

296. உங்களைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியம் அல்ல நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதே முக்கியம்

24 - 10

297 எனக்கு வாழ்க்கை ஒரு சின்னஞ்சிறு தீபம் அல்ல. அது ஒரு அற்புதமான ஒரு தீப் ந்தம் வருங்காலச் சந்ததிகளிடம் அதை அளிப்பதற்கு முன்னால் முடிந்தவரை அதைப் பிரகாசமாக்கச் செய்யவே ஆசைப்படுகிறேன்.

25 - 10

298. உங்களுக்கு என்று எண்ணவும் செயல்படவும் மதிக்கப்படவும் உரிமை உண்டு இந்த உரிமையை விட்டு விடாதீர்கள்

26 - 10

299. உன்னுடைய தீய எண்ணங்களை விட்டுவிடுங்கள் உங்களை எல்லோரும் புகழ்வார்கள்

27 - 10

300. நீ அறிந்துகொள் உண்மைக் காதலர்கள் சண்டைபிடித்துக் கொண்டுதான் இருப்பார்கள்

28 - 10

301. உங்களுக்கு என்று என்ன உரிமை வேண்டுகிறீர்களோ அதையே பிறர்க்கு அளியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 - 10

302 காதலர்களிடையே கோபம் தோன்றுமானால் அது நெருக்கமான உறவுக்கென்று கொள்ள வேண்டும்

30 – 10

303. காதலுக்கு அடுத்தபடியாக மனித உள்ளத்தில் தோன்றக் கூடிய தெய்வீக உணர்ச்சி இரக்கம்

31 - 10

304. உன் மனத்தை அது செல்லும் வழியிலேயே விடாது தீமையிலிருந்து அகற்றி நன்மையானவற்றில் செல்லவிடுவதே அறிவு

## நவம்பர் — 11

1 – 11

305. உங்கள் மனத்திலே உயர்ந்த உணர்ச்சிகள் உருவாக தூய எண்ணங்கள் தோன்ற தலைசிறந்த தலைவர்களிடம் செல்லுங்கள்

2 – 11

306 ஒரு நாளைக்கு ஒரு முறையாவது மனம்விட்டு மிக நன்றாகச் சிரியுங்கள். துன்பமும் துயரமும் நிறைந்துள்ள தோற்றத்தோடு இராதீர்கள்

3 - 11

307. உனது எண்ணங்கள் தூய்மையாகவும் இன்பம் பயப்பனவாகவும் எழில் தருவனவாகவும் நன்மை தருவனவாகவும் இருக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 - 11

308. "சினம் அடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனம் அடங்கக் கல்லாதவர்களுக்கு வாழ்வு இல்லை

5 - 11

309. உனது மனம்தான் உன்னுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம்

6 - 11

310 உன்னுடைய மனிதப்பிறவி உயர்ந்தது ஆனால் தீய வழியில் சென்று உடலையும் உள்ளத்தையும் பாழாக்கிக் கொள்ளாதே

7 - 11

311. விடாமுயற்சி என்ற பண்பு நமது ஆற்றலின் திறனை பல வகையிலும் பல வழியிலும் மேம்படுத்துகின்றன என்பதை அறிந்து கொள்

8 - 11

312. உனது குடும்பத்தின் சீரிய கட்டுக்கோப்பைச் சிதைக்கும் எந்த ஒரு செயலும் தீங்கு தரக்கூடியதும் வெறுக்கத்தக்கதும் ஆகும்

9 - 11

313. உன்னுடைய தகுதியை வெளிப்படுத்தும் ஆற்றல் வரும் வரையில் உனக்கு இந்த உலகத்தில் மதிப்பு கிடையாது

10 - 11

314. தேக பலத்தில் உன்னை ஒருவன் வெல்லலாம் ஆனால் அடக்கம் நேர்மை, பொறுமை, சினங்காத்தல், இவைகளில் நீ தோல்வியடையாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 - 11

315. ஏ பெண்ணே உனக்கு பகலில் நேரம் இருக்கிற போது நல்ல ஆன்மிக நூல்களைப் படித்து பிறருக்கு அதன் பொக்கிஷத்தைசொல்லிக் கொடு 12 - 11

316. எப்போதும் பெருமை, பேராசை பொறாமை ஆகிய மூன்றும் தான் மனிதனை நாசமடையச் செய்கின்றன

13 - 11

317. நமக்குள்ள ஆற்றல் எல்லாம் இறைவன் அளித்தது என்கின்ற உணர்வு நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் தெய்வீக ஆற்றல் தான் நம் அனைவரையும் ஆட்டிவைத்துக் கொண்டு இருக்கிறது அவனுடைய அருள் இல்லாமல் ஏதும் நடக்காது

14 - 11

318. உங்களைத் தீயவனாக மாற்றும் ஆற்றலைக் கொண்ட கோபத்தை கைவிடுங்கள் கோபம் வாயைத் திறக்கும் ஆனால் கண்களை இறுக்கமாக மூடிவிடும் 15 - 11

319. இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாரையும் நம்பியிராதே

16 - 11

320. அறம் என்ற நீரில் நீராடி வாய்மை என்ற வாசனைத் திரவியத்தை உடலில் பூசு, அப்போது உன் முகம் பேரொளியுடன் திகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 - 11

321. இறைவனிடம் மனம் உருகிப் பிரார்த்தனை செய்யும் போது அதத மனம் தூய்மையானதாக இருக்கிறதா என பார்த்துக்கொள்.

18 - 11

322. எடபோதும் உன் உள்ளத்தில் கடவுள் பற்றும், கடவுள் நினைவும் அதிகம் ஏற்படுமாறு செய்தால் தீய நினைவுகள், தீய சக்திகள் தலையெடுக்க மாட்டாது

19 - 11

323. நீங்கள் எப்போதும் சூரியன் உதயமாவதற்கு முன் எழுந்து விடுவது நல்லது. இத்தகைய நற்பழக்கங்கள் ஆரோக்கியத்திற்கும், செல்வத்திற்கும் அறிவு விருத்திக்கும் நல்லவை

20 - 11

324. எவனொருவன் யோசித்து பின் அழகான விதமான வார்த்தைகளைப் பேசுகிறானோ அவனே பெரியோர்களின் மதிப்பைப் பெறுகிறான்.

21 - 11

325. இந்த ''நான்'' என்கிற கர்வத்தைவிடு எல்லோரும் உன்னிடம் அன்பு கொள்வார்கள்

22 - 11

326. அற்ப புத்தியுடையவர்கள் பிறரிடம் நல்ல குணங்கள் பல இருந்தாலும் அவற்றை விடுத்து, அவரிடம் உள்ள சிறிய குறைபாடுகளையே பெரிதுபடுத்தித் தூற்றித் திரிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 - 11

**327.** உபகாரம் செய்யாதவர்களுக்கும் உபகாரம் செய்வது, பிரியமாக இருப்பது, செய்நன்றி மறக்காமல் இருப்பது, விழுந்தவர்களைத் தூக்கிவிடுவது ஆகியவைகளே நல்ல குலத்தில் பிறந்தவர்களுக்கு அடையாளங்கள்

24 - 11

**328.** உன்னிடம் எழும் தீய எண்ணங்களெல்லாம் அகற்றப்பட வேண்டும் ஒரு தீய எண்ணம் உன்னிடம் வந்தால் பின் ஆயிரக்கணக்கான தீய எண்ணங்கள் உன்னிடம் வந்து சேரும் 25 - 11

**329.** நீ தீயோரின் சேர்க்கையை விலக்கிக் கொள் அது எப்படிப்பட்ட நல்லவரையும் கெடுத்துவிடும் 26 - 11

**330.** நீ எப்போதும் நல்லதை நினைத்து நல்லதையே செய்

27 - 11

**331.** நீங்கள் உங்கள் தனித் தன்மையை இழந்துவிடக் கூடாது உங்களுக்கென ஒரு சுய சிந்தனை வேண்டும். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அது மிகவும் அவசியம் 28 - 11

**332.** உங்களுடன் அநேகப் பேர் பழகலாம் உரையாடி மகிழலாம் ஆனால் அவர்கள் எல்லாம் உங்கள் நண்பர்கள் என்று சொல்லிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 - 11

333. நீங்கள் ஒரு நண்பனைப் பெற வேண்டும் என்று விருப்பினால் நீங்களே ஒரு நல்ல நண்பனாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்

30 - 11

334. ஒருவர் உங்கள் பால் மிக்க விருப்பம் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் நீங்கள் அவருடைய நலனிலும் அக்கறை காட்ட வேண்டும்.

## டிசம்பர் — 12

1 - 12

335. உன்னைவிட அடுத்தவன் சுகமாக வாழ்கிறானே என்ற எண்ணந்தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாக இருக்கிறது.

2 - 12

336. உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை நீங்கள் தன்னலத்தை துறந்தவர்களா? அப்படியாயின் உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை

3 - 12

337. நீங்கள் சொல்வது போல் செய்து காட்டுங்கள். செய்து காட்டுவதை மட்டும் சொல்லிக் காட்டுங்கள்

4 - 12

338. வருங்காலத்தைப் பற்றி மனங்கலங்காதே வருவன வரும் போது இப்போதுள்ள அறிவை அப்போதும் செலுத்தி உன் கடமையை செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 - 12

339. நீங்கள் பிரார்த்தனையில் முழுமையான நம்பிக்கை கொண்டு விட்டீர்களானால் உங்களுக்கு சகல வழியிலும் வெற்றி கிட்டும் என்பது நம்பிக்கை.

6 - 12

340. நீங்கள் எதைப் பற்றி சிந்திப்பதாக இருந்தாலும் உயர்வாகவே சிந்திக்க வேண்டும். வாழ்க்கைக்கு உபயோகமாகும் விதத்தில் சிந்திக்க வேண்டும்

7 - 12

341. நம்மிடம் இருக்கும் திறமையை, சக்தியை எந்த அளவுக்கு சமுதாய நலனுக்குப் பயன் படுத்துகிறோமோ அந்த அளவுக்குத்தான் நமக்கு சமுதாயப் பிடிப்பும் உதவியும் கிடைக்கும்.

8 - 12

342. நாம் ஒருவரிடம் பணிவோடு பேசிப் பழகும்போது அவர்களுக்கும் நன்மை போன்றே பழக வேண்டும் என்ற எண்ணமும் உணர்வும் ஏற்படும்

9 - 12

343. உன் வாழ்வில் எந்த வகையில் உயர்ந்திருந்தாலும் தன் அலுவல்களைத் தானே செய்து கொள்வதில் ஒருதனி இன்பம் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 - 12

344. நீங்கள் மனிதனாக பிறந்து விட்டீர்கள் உங்களிடம் ஒரு சக்தி இருக்கத்தான் செய்யும். அதைக் கண்டு பிடித்து அதை வளர்த்துக் கொள்ளுங்கள்.

11 - 12

345. எப்பொழுதும் நீங்கள் சொன்னதே சரியென்று பிடிவாதம் செய்யவோ, வாதிடவோ செய்யாதீர்கள். அற்ப விஷயங்களை விட்டுக் கொடுத்து பெரிய விஷயங்களில் சமரசமாகப் போக முயலுங்கள்

12 - 12

346. ''நாளை செய்யலாம்'' என்று எதையும் ஒதுக்கி வைக்காதே அந்த நாளை பிறப்பதற்குள் நமது திட்டத்தின் போக்கே தலை கீழாகப் பயனற்றுவிட நேரிடும்

13 - 12

347. உங்கள் மனம் போனபடி பேசுவதால் யாருக்கும் நன்மை ஏற்படுவதில்லை அதனால் பலருக்கு ஆபத்தைத் தரக்கூடும்

14 - 12

348. உங்கள் திறமையை எக்காரணத்தைக் கொண்டும் நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள் எவ்வளவு மோசமான சூழ்நிலை உங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டாலும் தன்னம்பிக்கையை இழக்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 - 12

349. உன் சிந்தையில் நல்ல எண்ணங்கள் தோன்றினாலும் உன் மனம் உறுதியற்று, வலுவற்று இருந்தால் அந்த நல்ல எண்ணங்கள் பயனுள்ள வகையில் செயல் வடிவம் பெறாமல் அழிந்து போகக் கூடும்

16 - 12

350. உன் சிந்தையிலும், சொல்லிலும் செயலிலும் மிகமிக நேர்மையோடு இருப்பதே நீ செய்யும் மிகவும் பெரிய தவமாகும்

17 - 12

351. தூய இதயம், தூய உடல், சுறுசுறுப்பு செயல்புரிய எந்த நேரத்திலும் தயாராக இருக்கும் நிலை ஆகியவை ஒருவனிடம் இருக்க வேண்டும்

18 - 12

352. இறைவனிடம் வேண்டும் உதடுகள்விட சரியான சமயத்தில் பிறருக்கு உதவும் கரங்கள் புனிதமானவை

19 - 12

353. கடவுளை உண்மையாக நம்பியிருப்பவன் செய்யும் கைங்கரியங்கள் அனைத்தும் தூயதாகவும் பிறருக்கு நன்மைதருவதாகவும் அமையும்

20 - 12

354. நீ வாழ்க்கையில் உயர்வும் உய்வும் பெற இறைவனுடைய திருவடியே கதி என்று இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 - 12

355. முதலில் உனக்கென சில தகுதிகளை உண்டாக்கிக் கொள்ள முயற்சி செய் உன் மனத்தை நீயே திருத்திக் கொள்

22 - 12

356. உன் எண்ணங்களை தகுதியறிந்து எண்ணிப் பயன்தரத்தக்கதாக செய்து கொள். 23 - 12

357. யாரும் எதையும் சொல்லலாம் ஆனால் எல்லோருடைய சொல்லையும் நம்பாதீர்கள் 24 - 12

358. உன்னுடைய வாக்கை எப்போதும் ஒருபோதும் மீறி நடக்க எத்தனியாதே 25 - 12

359. வேண்டப்படாத போது வலியச் சென்று நீங்கள் ஆலோசனை கூறிவிடவேண்டாம். 26 - 12

360. நீ பிறருக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறு அதேபோல் நீயும் நடந்துகொள்ள வேண்டும் 27 - 12

361. எப்போதும் நல்லவனாக இரு நல்லதைச் செய் இதுவே தெய்வீக வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 - 12

**362.** உங்களுக்கு நடந்ததை மறந்து விடுங்கள் எதிர் காலத்தில் நம்பிக்கை வையுங்கள் 29 - 12

**363.** கவலைப்படாதீர்கள் வாழ்க்கையில் எதிர்படும் எந்தப் பிரச்சனையையும் சமாளிக்கவல்ல தெய்வீக ஆற்றல் உங்களுக்குள்ளே மறைந்து உள்ளது. 30 - 12

**364.** உங்களிடம் உள்ளதைப் பயன்படுத்தினால் உங்களிடம் இருப்பது பெருகும் 31 - 12

**365.** எது நிகழ்ந்தாலும் அதை புன்முறுவலுடன் வரவேற்க முயலுங்கள்.

## லீவ் வருடம் பெப்ரவரி 29

**366.** ''மனைவியை மடியில் வைத்துக்கொள்ளுங்கள், பணத்தைச் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளுங்கள் ஆனால் இதயத்தில் இறைவனை மட்டுமே வைத்துக் கொள்ளுங்கள்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிரார்த்தனை

"1965ல் அமெரிக்க விண்கலம் அப்பல்லோ சந்திரனுக்குச் சென்று திரும்புகையில் விசை பழுதுற்று கட்டுப்பாட்டிலிருந்து திசை தவறியது. விஞ்ஞானிகளால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியில் அவர்கள் அமெரிக்கா மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் அனைவரும் பிரார்த்தனை செய்யுங்கள் என்பதே. உடனே அமெரிக்கா எங்கும் பிரார்த்தனைகள் நடைபெற்றன. விண்கலத்தின் திசை நேர் வழிப்பட்டு பூமியில் இறங்கியது. இதே போன்று நாம் இன்று அல்லற் பட்டு அலைந்து கொண்டு இருக்கின்றோம். இந்த நிலையை அகற்றி சுபீட்சமாக வாழ இறைவனை பிரார்த்தியுங்கள்"

வி. செல்வரத்தினம் J. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org